**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக்கள் வங்கி – கொடகவெல கணக்கு இலக்கம் 245-1-001-7-0000050 கொண்ட சேகரிப்புக் கணக்குகள் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 321,068 தொகை என வங்கியினால் உறுதிப்படுத்தியிருந்த போதிலும் வங்கி இணக்கக் கூற்றில் ரூபா 358,362 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 37,294 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆண்டின் போது ரூபா 5,500,000 தொகை பெறுமதியான வாகனங்கள் மற்றும் ரூபா 5,500,000 தொகை பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சில் இருந்து சபைக்கு மானியமாக வழங்கியிருந்ததுடன் அப் பெறுமதியாகிய ரூபா 11,000,000 இனை மூலதன செலவீட்டிற்கான உதவுத் தொகை என ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு வேறாக காட்டப்பட வேண்டுமெனினும், மூலதன செலவீட்டிற்காக அரசிறை உதவுத் தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் பணத்திற்கு பெறும் மற்றும் மானியமாக கிடைக்கும் நிலையான சொத்துக்கள் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை என்ற ஒரே கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) திரண்ட நிதியம் ஊடாக பணமாக செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 1,844,438 தொகை எனினும், கொடுப்பனவுகளை கணக்குகளில் பதிவு செய்யும் போது திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,790,002 தொகை வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், கடன்கொடுத்தோருக்கு பணமாக செலுத்திய கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 2,618,759 தொகை எனினும், கணக்குகளில் பதிவு செய்யும் போதிலும் கடன்கொடுத்தோருக்கு கொடுப்பனவு என ரூபா 2,673,195 தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 54,436 தொகையினால் குறைவாகக் காட்டியதுடன் ரூபா 54,436 தொகையினால் கடன்கொடுத்தோர் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய விதப்புரை சமர்ப்பிப்பதற்கு முன்னர் ரூபா 46,931 தொகையான சொத்துக்களை கணக்குகளில் இருந்து அகற்றியதன் மூலம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 46,931 தொகை குறைவாகக் காட்டியது.

(உ) ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கு மீதிகள் ஒன்றிற்கு ஒன்று சமமாக இருக்க வேண்டும். எனினும் அந்த 02 மீதிகளிடையே ரூபா 98,996 இற்கான வித்தியாசம் காணப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவையாகக் காணப்பட்ட சம்பள மீளளிப்புத் தொகையாகிய ரூபா 1,643,145 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன், அத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடனும் இணங்கியது. அவ்வாறாயினும் 15 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 60,000 தொகையொன்று திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டு நிலுவை சம்பள மீளளிப்பு கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நடைமுறை சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதிய மீதி அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 4,805,445 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

60 தவணைகளில் செலுத்தும் இணக்கத்தின் மீது 2010 நவம்பர் மாதம் லீஸின் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த கப் வண்டிக்காக 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 1,499,790 தொகையொன்று செலுத்த வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் இறுதித் தவணைப் பணம் அதாவது 60 ஆவது தவணை ஆகிய ரூபா 149,979 தொகையினை செலுத்தி அக் கடன்கொடுத்தோர் மீதியை முற்றாக தீர்த்திருந்த போதிலும், மீண்டும் 2015 திசெம்பர் 15 திகதி ரூபா 160,973 தொகை செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் இணங்கிய தொகையை விட ரூபா 160,973 தொகை சபையினால் லீஸின் கம்பனிக்கு செலுத்தியிருந்ததுடன் அவ்வாறு மிகையாக செலுத்தியிருந்த தொகையை சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தொகை ரூபா 81,286,727 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பட்டோலை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டின் போது 02 விவசாய அமைப்புகளுக்கு ரூபா 550,000 இற்கான முற்பணங்கள் வழங்கியிருந்த போதிலும் அம்முற்பணம் எந்த நிர்மாண வேலைகளுக்காக வழங்கப்பட்டவை என அல்லது அம் முற்பணத்தினை தீர்த்தது அல்லது நிர்மாணவேலை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என பரிசோதனை மேற்கொள்வதற்கு உரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாண இலக்கம் 102 மற்றும் 760 | 2014 ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தலின் படி காணாமல் போன அல்லது தனிப்பட்ட முறையில் எடுத்துச் சென்று திருப்பி ஒப்படைக்கப்படாதவைகள் என இனங்காட்ட 02 லப்டொப் கணனிகள் மற்றும் கதிரைகள் ஆகிய பண்டங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களை இனங்கண்டு அவற்றின் பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாண இலக்கம் 177(1) | குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 219 சந்தர்ப்பங்களில் சேகரிக்கப்பட்ட வீதவரி, வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி ரூபா 2,172,944 தொகை சேகரிக்கும் உத்தியோகத்தர்களினால் 05 நாட்கள் மூலம் 24 நாட்கள் வரையான காலம் தாமதித்தே சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாண இலக்கம் 396(இ) | வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்திருந்த ரூபா 18,330 தொகை பெறுமதியான 05 காசோலைகள் குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு முரணாக வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (iv) நிதிப் பிரமாண இலக்கம் 571 | குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டிய ரூபா 960,466 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 10,449,768 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,742,736 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 292,968 தொகையினால் குறைந்திருந்ததுடன் அவை முன்னைய ஆண்டை விட 2.7 சதவீதம் குறைவடைதல் என அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டுவரும் வருமானங்களின் குறைவடைதல் மற்றும் மீண்டுவரும் செலவுகளில் அதிகரித்தல் என்பன முக்கியமாக பாதித்துள்ளது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 7,192 | 4,143 | 4,565 |
| வாடகை | 8,467 | 7,135 | 401 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 935 | 1,546 | - |
| ஏனைய வருமானங்கள் | 44,722 | 35,912 | 9,986 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வீதவரி, வாடகை, எழுத்தாணை மற்றும் தண்ட வருமானம் ஆகிய வருமான விடயங்களை சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 30 சதவீதம், 11 சதவீதம் மற்றும் 82 சதவீதம் சதவீதத்திற்கான குறைவு ஒன்றினைக் காட்டியது.

#### 2.3.3 வீத வரி

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2015 செப்தெம்பர் 30 திகதியில் உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 2,277,262 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 5,000 இனை மிகைத்து நிலுவையாகக் காணப்படும் வீத வரி செலுத்தும் 59 பேரிடம் ரூபா 963,941 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அவை மொத்த நிலுவைப் பெறுமதியில் 42 சதவீதமாகும்.

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை குடியரசின் 2014 திசெம்பர் 05 திகதிய 1892 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துவதற்காக அறிவித்தலின் சதுர அடி ஒன்றிற்கு ரூபா 100 வீதம் அறவிடப்பட வேண்டும். பிரதேசத்தில் காட்சிப்படுத்தியிருந்த அறிவித்தல் பலகையின் மூலம் வருமானம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 552,100 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழக்கும் ஆபத்து ஒன்று காணப்பட்டது.

(ஆ) கதுருகஸ்ஆர மற்றும் தெருன்னான்ஸேகம நீர் செயற்திட்டத்திற்காக சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 671,500 தொகை எனினும் ரூபா 780,478 தொகை கிடைத்திருந்தது. இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,195,529 செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 145,051 இற்கான செயற்பாட்டு நட்டமொன்று சபைக்கு நேரிட்டிருந்தது. மேலும், 2015 அக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய நீர் செயற்திட்டங்கள் இரண்டிலும் நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 1,586,656 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 5,000 இனை மிகைத்த நிலுவை ஒன்று காணப்படும் நீர் நுகர்வோர் 108 பேரிடம் ரூபா 1,087,845 தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(இ) மேற்கூறிய நீர் செயற்திட்டங்களில் 162 நீர் நுகர்வோரிடம் 2012 ஆண்டிற்கு முன்னைய அண்டுகள் முதல் ரூபா 1,947,721 இற்கான நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதேச சபையினால் வாராந்த சந்தை மற்றும் மீன்கடை ஆதனங்களை வாடகைக்கு கொடுக்கும் போது குறைந்த விலைகூறல் பல வருட காலமாக ஒரே பெறுமதியில் தீர்மானிக்கப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை இனங்கண்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு பெப்ரவரி முதல் திசெம்பர் வரையான நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்கண்டிருந்த போதிலும், கடந்த ஆண்டு நவம்பர் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் வரை முத்திரைக் கட்டணம் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) பதிவேடுகள் நாளது வரையும் காணப்படாமை அல்லது பெற்றிருந்த முற்பணங்கள் தீர்க்காமையின் காரணமாக நீண்ட காலமாக காணப்படும் ரூபா 2,539,786 இற்கான தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) சபைக்கு தேவையான வீதி விளக்குகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 245,825 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சபையினால் கொள்வனவு செய்திருந்த வீதி விளக்குகள் பொருத்திய இடங்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. பழுதுபார்த்தலின் போது கலற்றி அகற்றப்பட்ட மற்றும் மீண்டும் பழுதுபார்த்து பயன்படுத்தக் கூடிய வீதி விளக்குகள் தொடர்பாகவும் முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2015 மே 15 திகதி முதல் சபையின் பதவிக்காலம் முடிவடைந்திருந்தது. மே மாதத்திற்கான மந்திரிமார் படியாக ரூபா 225,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் அவர்களுக்கு உரித்தான 15 நாட்களுக்கான படி மாத்திரம் மீளளிப்பு செய்திருந்தது. மேலும், அவற்றில் ஒரு மந்திரிக்கு மிகையாக செலுத்தியிருந்த ரூபா 7,500 சபைக்கு மீண்டும் செலுத்தியிருந்தார். இதன் பிரகாரம் சம்பள செலவுகள் ரூபா 105,000 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், பிரதேச சபையினால் மந்திரிமார்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 105,000 கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2006 அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் பெறுகைகள் அதிகாரியினால் தொழிநுட்ப கொள்வனவுகளின் போது தொழிநுட்ப மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் பிரதேச சபையின் கொள்வனவுகள் தொழிநுட்ப மதிப்பாய்வு ஒன்று இன்றி மேற்கொள்ளப்படுவதுடன், வழிகாட்டல் கோவையின் 8:12:3 இன் பிரகாரம் வழங்கப்பட்ட பண்டங்கள் உரிய நியமக் குறிப்பீடுகள் மற்றும் ஏனைய இணங்கிய தீர்மானங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டுமெனினும் இது தொடர்பாக தொழிநுட்ப அறிவுரைடய நபர் ஒருவரினால் உரிய விதப்புரை வழங்கியிருக்கவில்லை. அவ்வாறு செய்யப்படாமல் குறைந்த விலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச சபை கட்டிடத்தின் திறப்பு விழாவிற்காக ரூபா 470,000 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போது அச் செலவுகளுக்காக 2011 ஜனவரி 04 திகதி பெற்றிருந்த ரூபா 100,000 இற்கான முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்ப்பதற்கு இயலாதிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

(அ) சப்ரகமுவ மாகாண சபை முதலமைச்சரின் நிதியேற்பாடுகளின் மீது கிராமிய நுழைபாதைகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்திய பனஹடுவ ஸேருவ பாதை சரளை கற்கள் போடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக தொழிநுட்ப உத்தியோகத்தரின் ரூபா 499,280 இற்கான மதிப்பீடு ஒன்றின் மீது 03 மாத காலப்பகுதியில் நிறைவேற்றுவதாக பல்லேபெத்த எகமுது கிராம அபிவிருத்தி சங்கத்துடன் ரூபா 499,980 பெறுமதியான உடன்படிக்கையொன்று 2015 மார்ச் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறிய நிர்மாணவேலை தொடர்பாக 2015 திசெம்பர் 08 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது உரிய நியமங்களுக்கு ஏற்ற சரளை மண் போடப்பட்டமையின் காரணமாக மழை காலங்களில் நீர் பெருக்கெடுத்து பாதையின் மத்தியால் ஓடியமையால் அங்கு போடப்பட்ட சரளை மண் கழுவிச் செல்லல் நடைபெற்று பாரிய அளவான கற்கள் சரளைக்கள் வெளியே தோற்றக்கூடியதாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 05 நிர்மாண வேலைகளுக்காக முற்பணமாக ரூபா 730,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் குறிப்பிட்ட முற்பணத்தினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

## 3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

2006 நவம்பர் 08 திகதிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகளை வகைப்படுத்தி ஒப்படைப்பதற்கு பதிலாக இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் குவித்தல் மாத்திரம் நடைபெற்றிருந்தது. சந்திரா குளத்திற்கு அண்மித்த காணி ஒன்றில் இவ்வாறு பாரிய அளவில் குவித்திருந்த குப்பை குவியல்கள் கிட்டிய நகரத்தில் பிரதான நீர் மூலம் ஆகிய குளத்திற்கு மற்றும் சுற்றாடலுக்கு தீவிர தாக்கத்தினை ஏற்படுத்தும் ஆபத்து ஒன்று காணப்பட்டது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான பதிவு இலக்கம் LL - 6987 கொண்ட போடேன் டிபர் வண்டி சேவை தேவைப்படுபோருக்கு வாடகைக்குக் கொடுப்பதாகும். சபையின் நிர்மாண வேலைகளுக்காகவும் ஈடுபடுத்திய போதிலும் அவ்வாறு எந்த நிர்மாண வேலைக்காக பயன்படுத்தப்பட்டது அல்லது அதனை வாடகைக்கு கொடுத்து வருமானம் பெற்றமை தொடர்பாக பதிவுகள் அல்லது பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிவு இலக்கம் MG-330 கொண்ட மோடர் கிரேடர் இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் இயந்திரத்தை வெளியே எடுத்துச் செல்லும் போது பதிவேடு ஒன்றில் பதிவு செய்திருக்கவில்லை. இயந்திர இயக்குனர்கள் தேவைக்கு ஏற்ப இடையிடையே வளவில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுவதாக கோவையின் பிரகாரம் மற்றும் 2015 திசெம்பர் 04 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், ஓட்ட அட்டவணைகள் பேணும் போது எரிபொருள் பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அனேகமான சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட மொத்த எரிபொருள் எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்டதாக எரிபொருள் சமப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய ரூபா 85,743 இற்கான எரிபொருள் செலவு உண்மையான தேவைக்காக பயன்படுத்தப்பட்ட செலவு ஒன்றா என சிக்கலாக இருந்ததுடன், 2014 திசெம்பர் 29 ஆம் திகதியின் பின்னர் ஓட்ட அட்டவணைகள் ஏதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) பதிவு இலக்கம் SG AAQ-5005 கொண்ட முச்சக்கர வண்டியின் ஓட்ட அட்டவணைகள் மிகவும் தெளிவற்ற விதமாக எழுதப்பட்டிருந்ததுடன் எரிபொருள் சமப்படுத்தல் பிழையான முறையில் பேணப்பட்டிருந்ததுடன், 2015 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 77,682 தொகை பெறுமதியான 643.77 லீற்றர்கள் எரிபொருள் உண்மையான தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்டவை என்பனது கேள்விக்குறியாகவுள்ளது.

(ஈ) இலக்கம் RA – 5735 இலக்க டிரக்டர் மற்றும் LF – 4834 கொண்ட மகேந்திரா கப் வண்டி ஆகியவற்றை ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை ஓட்டப்பட்டுள்ளதா என கோவையின் பிரகாரம் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(உ) சபையினால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதனது அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.6 உரித்தாக்கப்படாத சொத்துக்களை முறை சாராத விதமாக பயன்படுத்துதல்**

(i) துங்கம பிரதான அலுவலக காணி, பல்லேபெத்த உப அலுவலக காணி, பணாமுர நூலகக் காணி, முதுன்மாங்கட விளையாட்டுத் திடல், பனாமுர, பல்லேபெத்த மற்றும் உடவலவ ஆகிய வாராந்த சந்தைகள் அமைந்துள்ள காணிகள் வல்லேவ, பனாமுர, குட்டிகல, பதனங்கல, ஜுலங்கொடே, லங்யன கஹதொட மற்றும் 96 ஆகிய மயானங்களாகியுள்ள காணிகள் மற்றும் ஆதனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இலக்கம் RC – 1402, இலக்கம் RD – 6440 , இலக்கம் RD – 7993 கொண்ட ஸ்டான்டட் டிரக்டர், இலக்கம் RA – 5735 பாம்ப் டிரக் டிரக்டர் வண்டி இலக்கம் LL - 7529 கொண்ட போடோன் குரூ கப் வண்டி, இலக்கம் LL - 6987 கொண்ட போடோன் டிப்பர் வண்டி மற்றும் இலக்கம் ZA – 5014 கொண்ட போடோன் பெக்கோ லோடர் இயந்திரம் என்பவற்றை சபைக்கு வழங்கிய நிறுவனங்களில் இருந்து சபையின் பேருக்கு மாற்றுவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தியாகியிருக்கவில்லை.

**04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

20 செலவு விடயங்களுக்கு 2015 ஆண்டின் போது ரூபா 3,972,128 தொகை நிதியேற்பாடு செய்திருந்த போதிலும் அந்த 20 செலவு விடயங்களில் இருந்து செலவுகள் ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்